**செப்டம்பர் - 05**

# TNPSC துளிகள்

- இராஜஸ்தான் அரசாங்கமானது பமாஷா யோஜனா திட்டத்தின்கீழ் வறுமைக் கோட்டிற்கு கீழ்உள்ள (BPL) பெண்கள் அனைவருக்கும் கைபேசியை வழங்கவுள்ளது.
    - இந்தத் திட்டமானது, அரசாங்கத் திட்டங்களின் நிதி மற்றும் நிதிசாரா சலுகைகளை வெளிப்படையாகக் கொண்டு சேர்க்கும் நோக்கம் கொண்டதாகும்.
- சர்வதேச வான் போக்குவரத்து உச்சிமாநாடு புது தில்லியில் தொடங்கியது. இந்த உச்சி மாநாடானது மத்திய வான்போக்குவரத்து அமைச்சகத்தின் இந்திய விமான நிலைய ஆணையம் மற்றும் சர்வதேச வான்வழிப் போக்குவரத்துச் சங்கத்தால் (IATA) இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டதாகும்.
- ISSF உலக சாம்பியன்ஷிப் போட்டியின் பெண்களுக்கான 10மீ துப்பாக்கி சுடுதல் பிரிவில் முறையே வெள்ளிப் பதக்கத்தையும் நான்காவது இடத்தையும் பெற்ற அஞ்சும் மோட்கில் மற்றும் அபூர்வா சண்டேலா ஆகிய இருவரும் 2020 ஒலிம்பிக் போட்டியில் பங்குபெறுவதற்கான இடத்தைப் பிடித்து, இந்திய துப்பாக்கி சுடும் வீரர்களில் முதல் அணி வீரர்களாக தேர்வாயினர்.
- மத்திய உள்துறை அமைச்சகமானது, கர்வா மாவட்டத்தில் உள்ள நாகர் அந்தேரி நகரம் மற்றும் அதன் இரயில் நிலையத்தை பன்சிதா நகர் எனப் பெயர் மாற்றம் செய்யும் ஜார்க்கண்ட் அரசின் பரிந்துரைக்கு ஒப்புதல் அளித்துள்ளது.
    - அரசாங்க நெறிமுறைகளின்படி, கிராமங்கள், நகரங்கள், பெருநகரங்கள் மற்றும் இரயில் நிலையங்கள் போன்றவற்றை பெயர் மாற்றம் செய்வதற்கு அனைத்து மாநிலங்களும், மத்திய உள்துறை அமைச்சகத்திடம் இருந்து தடையின்மைச் சான்றிதல் பெறுவது அவசியமாகும்.
- 'நீர்வளப் பாதுகாப்பிற்காக இமயமலையின் நீரூற்றுக்களை மீட்டெடுத்தல் மற்றும் சேகரிப்புப் பகுதிகளை உருவாக்குதல்' என்ற தலைப்பினைக் கொண்ட அறிக்கையை நிதி ஆயோக்கால் அமைக்கப்பட்ட வல்லுனர் குழுவானது சமர்ப்பித்தது.
    - இந்த அறிக்கையானது குடிநீர் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் வாய்ந்த நீரூற்றுகளில் கிட்டத்தட்ட 30% வற்றிக் கொண்டிருப்பதாகவும் 50% நீரூற்றுகளில் நீர்வரத்து குறைந்துவிட்டதாகவும் குறிப்பிடுகிறது.
- தென்கிழக்கு ஆசியாவிற்கான உலக சுகாதார அமைப்பின் பிராந்திய அமைப்பின் 71வது அமர்வு புது தில்லியில் நடைபெற்றது.
- பாகிஸ்தானின் 13வது அதிபராக டாக்டர் ஆரிஃப் உர் ரஹ்மான் ஆல்வி தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர், தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சியின் நிறுவன உறுப்பினர்களுள் ஒருவராவார். அவர், 2018 செப்டம்பர் 9-ம் தேதி அதிபருக்கான பதவிப் பிரமாணம் எடுக்கவுள்ளார்.

# தேசியச் செய்திகள்

## நோயாளிகளின் உரிமைக்கான சாசன வரைவு

- மத்திய சுகாதார மற்றம் குடும்பநல அமைச்சகமானது, தேசிய மனித உரிமைகள் ஆணையத்தால் தயாரிக்கப்பட்ட நோயாளிகளின் உரிமைக்கான சாசன வரைவை வெளியிட்டுள்ளது.
- அமைச்சகமானது, முறையான சுகாதாரப் பாதுகாப்பு வழங்குவதற்காக நோயாளிகளின் உரிமைக்கான சாசன வரைவை மாநில அரசாங்கத்தின் மூலம் அமல்படுத்தத் திட்டமிட்டுள்ளது.
- இந்தச் சாசனமானது, திடமான வழிமுறைகளை உருவாக்க, மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு வழிகாட்டு ஆவணமாக செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தேசிய தூய்மை பள்ளிகள் விருது

- நாடு முழுவதும் தேர்வு செய்யப்பட்டிருந்த 52 பள்ளிகளில், புதுச்சேரி கூனிச்சம்பட்டைச் சேர்ந்த பாவேந்தர் பாரதிதாசன் அரசு தொடக்கப்பள்ளி தேசிய தூய்மை பள்ளிகள் விருதில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது.
- தேசிய தூய்மை பள்ளிகள் விருதில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. மூன்றாவது இடத்தை ஆந்திரப் பிரதேசமும் குஜராத்தும் பகிர்ந்து கொண்டன.
- தேசிய தூய்மை பள்ளிகள் விருதுக்கான தரவரிசையும் பட்டியலும் தூய்மை கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தால் வழங்கப்படுகிறது

# சர்வதேசச் செய்திகள்

## சீனா – ஆப்பிரிக்கா ஒத்துழைப்பிற்கான சர்வதேசச் செய்திகள் மன்றம்

- சீனா, ஆப்பிரிக்க கண்டத்தில் பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கும், பசிக் கொடுமையை எதிர்க்கவும் தொழிற்துறையை வளர்க்கவும் 60 பில்லியன் டாலர்களை நிதிஉதவியாக அளிப்பதாக உறுதியளித்துள்ளது.



- இதற்கான அறிவிப்பானது, பீஜிங்கில் நடைபெற்ற 3வது சீனா-ஆப்பிரிக்கா ஒத்துழைப்பிற்கான மன்ற தொடக்க உரையில் சீன அதிபர் ஜி ஜிங்பிங்கால் அறிவிக்கப்பட்டது.
- FOCAC என்பது சீனா மற்றும் ஆப்பிரிக்காவின் அனைத்து நாடுகளுக்கிடையேயான (எஸ்வாடினி என்ற நாட்டைத் தவிர) அதிகாரப்பூர்வ மன்றமாகும். இது 2000ஆம் ஆண்டு பீஜிங்கில் அமைச்சரவை மாநாடாகத் தொடங்கப்பட்டது. அன்று முதல் இது சீனாவிலும் ஆப்பிரிக்காவிலும் மாறிமாறி மூன்று வருடத்திற்கு ஒருமுறை நடந்து வருகிறது.

## கசிண்ட் 2018

- இந்திய மற்றும் கஜகஸ்தான் ராணுவங்களுக்கிடையேயான 'கசிண்ட்' (KAZIND) எனப்படும் இந்தியா-கஜகஸ்தான் கூட்டு இராணுவப் பயிற்சியானது கஜகஸ்தானின் ஒட்டார் பகுதியில் 2018 செப்டம்பரில் 10-ம் தேதி முதல் 23-ம் தேதி வரை நடைபெற உள்ளது.
- இது, பாதுகாப்பு அரங்கில் பரந்த ஒத்துழைப்பு வரலாற்றைக் கொண்டுள்ள, இந்த இருநாடுகளுக்கிடையேயான மூன்றாவது கூட்டு இராணுவப் பயிற்சி ஆகும்.
- இப்பயிற்சியின் இரண்டாவது பதிப்பானது, கடந்த ஆண்டு இந்தியாவில் நடைபெற்றது.
- இப்பயிற்சியானது, கஜகஸ்தான் இராணுவம் மற்றும் இந்திய இராணுவத்திற்கிடையேயான உறவுகள் மற்றும் திறன்களை பரிமாறிக் கொள்ளுதல், இருநாட்டு இராணுவங்களுக்கிடையேயான உறவுகளை உருவாக்குவதையும் அவற்றை வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## இந்தியா மற்றும் வங்கதேசத்திற்கிடையேயான இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் பேச்சுவார்த்தைகள்

- இந்தியா மற்றும் வங்கதேச எல்லைப் படைப்பிரிவினர்களுக்கிடையேயான இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் பேச்சுவார்த்தையானது புதுதில்லியில் தொடங்கியது.
- இந்தப் பேச்சுவார்த்தையானது, எல்லைக்கு அப்பால் நடக்கும் குற்றங்களான போதைப் பொருள் கடத்தல், கால்நடைகளை அபகரித்தல் மற்றும் சர்வதேச எல்லைகளுக்கு இடையே நடக்கும் ஆயுதக் கடத்தல்களை தடுப்பதற்காக இருநாட்டுக்கிடையேயான ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான நோக்கம் ஆகியவற்றைக் கொண்டதாகும்.
- இது 1975 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதிலிருந்து இரு தரப்பினருக்கிடையே நடக்கும் 47வது இயக்குனர் ஜெனரல் அளவிலான பேச்சுவார்த்தையாகும். கடந்த இயக்குனர் ஜெனரல் அளவிலான பேச்சுவார்த்தையானது 2018 ஆண்டு ஏப்ரல் மாதம் டாக்காவில் நடைபெற்றது.

## அமெரிக்க இராணுவம் பாகிஸ்தானுக்கு வழங்கிவந்த நிதியுதவி ரத்து

- பயங்கரவாத அமைப்பினருக்கு எதிரான தீர்க்கமான நடவடிக்கைகளை எடுப்பதில் தோல்வி அடைந்ததன் விளைவாக பாகிஸ்தானுக்கு 300 மில்லியன் அமெரிக்க டாலர்கள் நிதி உதவியை ரத்து செய்ய அமெரிக்க இராணுவம் முடிவு செய்துள்ளது.
- கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் ட்ரம்ப் தனது புதிய தெற்காசியக் கொள்கையை வெளியிட்டு, அத்தகைய அமைப்பினருக்கு எதிராக மேலும் அதிக நடவடிக்கை எடுக்குமாறு பாகிஸ்தானிடம் கேட்டுக்கொண்டார்.
- முன்னதாக, பயங்கரவாதக் குழுக்களை வளர்ப்பதாகவும் அவர்களுக்கு எதிராக தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்க முன்விளையாததாகவும் குற்றம்சாட்டி பாகிஸ்தானுக்கு, பாதுகாப்பிற்கான நிதி உதவியாக 1.15 பில்லியன் டாலர்கள் வழங்குவதை அமெரிக்கா இந்த ஆண்டு ஜனவரி மாதத்தோடு நிறுத்தியது.

## உக்ரைன் நேட்டோ கூட்டு இராணுவப் பயிற்சிகள்

- 2018 ஆம் ஆண்டிற்கான ரேபிட் ட்ரிடென்ட் பயிற்சியானது லிவீவின் மேற்குப்பகுதியில் செப்டம்பர் மாதம் 3ம் தேதி தொடங்கியது.
- இது, உக்ரைன் மற்றும் 10 வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு நாடுகளுக்கிடையேயான கூட்டு இராணுவப் பயிற்சியாகும்.

# பொருளாதாரச் செய்திகள்

## உள்ளக குறைதீர்ப்புத் திட்டம் (Internal Ombudsman - IO) 2018

- இந்திய ரிசர்வ் வங்கியானது, 10க்கும் மேற்பட்ட கிளைகளைக் கொண்ட பட்டியலிடப்பட்ட வங்கிகளை, உள்ளக குறைதீர்ப்பாளரை நியமிக்க கேட்டுக் கொண்டுள்ளது.
- அனைத்து மண்டல ஊரக வங்கிகளுக்கும் அதன் உத்தரவிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- குறைதீர்ப்பாளர் என்பவர், உரிமை மீறல்கள் அல்லது பொதுமக்களின் புகார்களை தீர்ப்பதற்கும் அவற்றை விசாரிப்பதற்கும் நியமிக்கப்படும் அதிகாரம் கொண்ட நபராவார்.
- இந்த IO-2018 திட்டத்தின் அமல்படுத்துதலானது ரிசர்வ் வங்கியின் ஒழுங்குமுறை மேற்பார்வைக்கு அப்பாற்பட்டு வங்கியினுடைய உள்ளக தணிக்கை முறையைக் கொண்டு கண்காணிக்கப்படும்.

\- - - - - - - - - - - -